சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 23.03.2026
வா.சா.1 –ராஜீ S/oசின்னையா
O.S. No.2/2024
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் கூலிவேலை செய்து வருகிறேன். வழக்கு சொத்தின் அளவீடுகள் தெரியுமா என்றால் தெரியாது. ஒத்திபத்திரத்தை ராஜ்குமாருக்கு சின்னையன் எழுதி கொடுத்தார். மேற்படி ஒத்திதொகையானது 2,25,000/-ரூபாய் ஆகும். மேற்படி 2,25,000/-ரூபாய் என்பது மட்டும் தான் தெரியும். மேற்படி தொகை ஒரே தவணையில் கெனாடுக்கப்பட்டதா அல்லது பல தவணைகளில் கொடுக்கப்பட்டதா என்ற விபரம் தெரியாது. வழக்கு சொத்தின் 3 திசைகளில் ராஜ்குமாரின் இடமும் ஒரு திசையில் தென்புறத்தில் வாய்க்காலும் உள்ளது. 4ம் வாதி முருகேசன் வெளிநாட்டில் உள்ளார். என்ன வேலை பார்க்கிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. எப்போது இந்தியா வந்தார், எப்போது சென்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2 ஆண்டுகளுக்கு முன்பு வந்தார். எதுக்காக வந்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. வந்திருந்தார். வந்தது தெரியும் என்ன விபரம் என்று தெரியாது. சின்னன் வாங்கியிருக்கும் விபரம் முருகேசனுக்கு தெரியாது. அதன்பிறகு தான் அவருக்கு நாங்கள் தெரிவித்தோம். இந்தியாவிற்கு வீட்டை பார்ப்பதற்காக தான் வந்திருந்தார். மேற்படி விபரம் நடந்த போது, நான் 4ம் வாதியுடன் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். ரூபாயை சின்னனிடம் கொடுத்துள்ளார். எப்போது கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் சுமார் 2-1/2 ஆண்டுகளுக்கு மேலாக கொடுத்துள்ளார். ரொக்கமாக கொடுத்தாரா, காசோலை மூலமாக கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் விபரங்களுக்கு

எழுத்துபூர்வமாக ஆதாரம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. எப்போது முருகேசன் இந்தியா வந்தார் ஷிப்போது சென்றார் என்பதை பாஸ்போட்டை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். நான் அவரிடம் வேலை செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.23 21:38:28 +0530

Sub Judge

Melur